# தூதன்

தூதன்-26 அக்டோபர் 2017 தூது-9

நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள் ஆதியாகமம் 41:40



## வசனத்தின் வழியில் தூய்மை
## வாலிபர் வாழ்வில் மேன்மை

Private Circulation only

தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| ஆராதனை பாடல்கள் | 07 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| அன்பு | 13 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| நரி | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| Health Tips | 26 |
| Harvest Festival Weekly Sales | 29 |
| Birthday Celebrants | 30 |
| Wedding Anniversary Celebrants | 33 |
| 2nd Temple Built by Zerubbabel | 35 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

## திருமறையில் வாலிபரின் ஆன்மீகம்
## (The spirituality of youth in the Bible)

"இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?" (சங்.119:9)

கிறிஸ்துவுக்குள் அன்பான உடன்விசுவாசிகளே,

தனியொரு இளைஞனாய், திருப்பிதாவின் தவப்புதல்வனாய், தாரணியை மீட்டெடுத்து ஒப்புரவாக்கிய தனையனாம் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவரையும் குறிப்பாக இளைஞரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். யோவான் தன்னுடைய இரண்டாம் நிருபத்தில் குறிப்பிட்டுள்ளபடி வாலிபருக்கு, "அவர்கள் பலவான்கள், தேவவசனம் நிலை பெற்றிருக்கிறவர்கள், பொல்லாங்கனை ஜெயித்தவர்கள்" என்ற காரணங்களினால் இம்மடலை எழுதுவதாகக் குறிப்பிடுகிறார். சபையிலும், சமுதாயத்திலும் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் மீட்பின் அடையாளங்களாக வாலிபர்களை அவர் காண்கிறார். 1517-ம் ஆண்டிலே, சபையிலே சீர்திருத்தத்தைக் கொண்டுவந்த தனியொரு நபரான மார்ட்டின் லூத்தருக்கு அப்போதைய அகவை முப்பத்து நான்கு மட்டுமே! ஆகவே வாலிபர் ஆன்மீகத்தைத் திருமறையின் வெளிச்சத்தில் உரசிப்பார்த்து அனல் மூட்டும் முயற்சியாக இக்கட்டுரையைக் காணலாம். வாலிபர் வயோதிபரை மதிக்கவும். வயோதிபர் வாலிபருக்கு நல்வழிகாட்டவும் ஆண்டவர் அழைக்கிறார். Youth is the age of vigour, victorious over the devil and stability in the word of God. Young people should respect the parents and all elderly, they in return lead the youth in God. (எபே. 6:1-4).

**வாலிபம் : மாயையா? உண்மையா? (Youth - an age of fantasy or reality?)**

நவீனமயமாக்கலில் அனைவரும் சிதறடிக்கப்பட்டு, ஆன்மீகம் சவாலாக்கப்பட்டுள்ள இச்சூழலினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வாலிபரே என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இழந்துபோன வாழ்வைத் திரும்பவும் இறைவனுக்குள் கட்ட உதவும் ஒரே மறை திருமறையாகும். ஆகவே திருமறையின் வெளிச்சத்தில் வாலிபத்தின் நிலையைப் புரிந்துகொள்வோம். சபை உரையாளர் என்னப்படும் பிரசங்கி புத்தகத்தின் மையக்கருத்து இதுவே : "இறைவனற்ற வாழ்வு மாயையே! இறை பயமும், இறை நினைவும் கொண்ட வாழ்வுதான் பொருளுள்ளது". வாலிபர் தம் பருவத்தை மகிழ்ச்சியாகக் களிக்கலாம், விருப்பப்படி வாழலாம். ஆனால் நியாயத்தில் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது என்ன நிலை என்பதை உணர்ந்து பார்க்க அழைக்கப்படுகின்றனர் (பிரசங்கி 11:9-12:1). ஆகவே வாலிபர் மட்டுமல்ல, வாலிபரை வழிநடத்தும் வயோதிபரும், வாலிபப் பருவத்தை எட்டவிழையும் சிறுவர்களும்கூட கவனமாய், எச்சரிக்கையாய் வாழ அழைக்கப்படுகின்றனர்.

## வாலிபத்தின் மேன்மை (The greatness of youth)

திருமறையின் வெளிச்சத்தில் வாலிப வயது எத்துனை மேன்மையானது என்பதைப் பல திருவசனங்களின் வழியே உணரலாம். வாலிபரின் அழகு அவர்கள் வலிமையில் (உடல், மனம்) இருக்கிறது (நீதி.20:29). வாலிப வயது என்பது இறைவனால் மட்டுமே வழங்கப்படும் அருட்கொடை. முதிர்ச்சியான காலத்தில் இருதயத்தை இளமையாக்கி, ஆன்மீகத்தைச் சீர்படுத்தும் ஆண்டவர் நமக்குண்டு(சங். 103:5). இளைஞரின் வாழ்வு ஓங்கி வளரும் மரம் போன்றது எனவும், அழகான வேலைப்பாடுகள் கொண்ட அரமனை மூலைக்கல் போன்றது எனவும் திருமறை மேன்மைப்படுத்துகிறது (சங்.144:12). உன்னதப்பாட்டில் கர்த்தருக்குள் பிரியமுள்ள மணவாட்டியாய் கனி தரும் வாழ்வு போன்றது வாலிபம் (2:3) என்பதைக் காணலாம். சுய இச்சையின்படியல்ல, இறைச்சித்தம், இறைபயம், இறை நினைவில் வாழும் வாலிப வாழ்வு நிலைபெற்ற வாழ்வு என்று வேதம் தெளிவுறச் செப்புகிறது (பிரசங்கி 11:9-10). வாலிபரே, கன்னியரே கவனிப்பீரோ?!

## வாலிபத்தின் கடமைகள் (Duties of Youth):

இளைஞரின் அடிப்படை ஆன்மீகக் கடமைகள் சிலவற்றைத் திருமறை கோடிட்டுக் காட்டுகிறது. அவையாவன:

### 1.கடவுளை எப்போதும் நினைத்தல் (Ever remember God)

1. தீங்கிலிருந்து தப்பித்துக்கொள்ள
To be saved from evil (பிரசங்கி 12:1)
2. கர்த்தருடைய பயத்தில் மட்டும் வளர
To fear the Lord ( 1 இராஜா. 18:12)
3. கர்த்தரையே எப்போதும் நம்ப
To believe in the Lord always (சங்.71:5)
4. வசனத்தைக் காத்து வழியை சுத்தம் பண்ணிக்கொள்ள
Purify the way by the word of God (சங்.119:9)

### 2. முதியோரை மதித்தல் (Respect the elderly)

1.கடவுள் பயத்தோடு முதியோரைக் கனம் பண்ணு
Honour the elderly with the fear of God (லேவி.19:32)
2.முதியோர்முன் கருத்தை வெளியிடுவதில் கவனமாயிரு
Reserve your comments before the elderly ( யோபு 32:6)
3. முதியோரைப் பெற்றோர்போல் மதி
Treat elders like parents (1 தீமோ. 5:1)
4. தலைவர்களை மூப்பராக மதி
Treat leaders as elders (1 பேதுரு 5:1)

### 3. பெற்றோரைக் கனப்படுத்துதல் (Honouring Parents)

1. கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படி
Obey your parents for long life (யாத்.20:12, உபா.5:16, எபே.6:2-3.)
2. அவர்தம் சத்தத்திற்குச் செவிகொடு
Listen to your parents (நீதி. 23:22)

3.அவர்களுக்குப் பயந்திரு Fear your parents (லேவி. 19:3)
4.பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மை செய்
Reciprocate the goodness done by parents (1 தீமோ. 5:4)
5.அவர் தம் அறிவுரையைக்கேள் Listen to their counsel (நீதி.1:8)
6.கர்த்தருக்குள் கீழ்ப்படி
Obey in the Lord to your parents (எபே.1:6,கொலோ. 3:20)

**4. வாழ்க்கைத்துணைக்கு உண்மையாயிருத்தல் (Faithful to the partner)**

1.இளவயதின் துணையோடே மாத்திரம் மகிழ்ந்திரு
Enjoy your life only with your life partner (நீதி.5:18)
2. அந்நிய துணைக்கு இடம் கொடாதே
Restrain from false partners (நீதி. 2:17)
3. வாழ்க்கைத்துணைக்கு துரோகம் செய்யாதே, உண்மையாயிரு
Do not be disloyal but be faithful to your partner (மல்.2:14,15)

வாழ்வின் அசாதாரணமான, நெருக்கடியான சூழ்நிலைகளிலும் மிகச்சிறப்பான முன்னுதாரணங்களாகத் திகழ்ந்த கன்னியர்களில் சிலர் இதோ: தகப்பன் கர்த்தருக்குப் பொருத்தனை செய்ததை அங்கீகரித்து தன் உயிரை அர்ப்பணித்த யெப்தாவின் மகள் (நியா.11:36); கணவன் இறந்த பின்னும் மாமியாரை விடாமல் பற்றிக்கொண்டு ஆண்டவரின் சாட்சியாய் மாறின இளம் விதவை மருமகள் ரூத் (1:16-17); அந்நிய தேசத்திலும் தன் சொந்த மக்களை தன் உயிரைப் பணயம் வைத்து தைரியமாய்க் காத்த இளம் அரசி எஸ்தர் (4:15-16); கணவரை அறியாத நிலையிலும் கடவுளின் திட்டத்திற்கு அர்ப்பணித்துத் தாயான கன்னி மரியாள் (லூக்.1:38); இறைவாக்குரைக்கும் வரம் பெற்ற ஊழியர் பிலிப்புவின் மகள்கள் (அப்.21:9). அதேபோல் சிறப்புக்குரிய இளம் காளையர்கள் இதோ: தாயின் பொருத்தனையை ஏற்று வாழ்வைத் தியாகம் செய்து இறைவனிடம் முழுவதும் அர்ப்பணித்த இளம் சாமுவேல் (1 சாமு.2:18); கர்த்தரின் பலத்தை நம்பி பெரிய கோலியாத்தை வீழ்த்தின சிறிய இளைஞன் தாவீது (1சாமு.17:33); செம்மையாய் நாட்டை ஆண்ட இளம் அரசன் யோவாஸ் (2 இராஜா.12:1-2); நற்சாட்சி பெற்ற இளம் ஊழியர் தீமோத்தேயு (1 தீமோ.1:5); வாலிபத்தை மட்டுமல்ல, வாழ்வையே சிலுவை மட்டும் அர்ப்பணித்த மீட்பர் இயேசுகிறிஸ்து (லூக்கா 22:45-52). There are several examplery young women like Jephthah's daughter, Ruth, Esther, Virgin Mary, Philip's daughters so on and so forth and young lads like Samuel, David, Joash, Timothy and our Lord Jesus Christ). இப்படிப்பட்ட எண்ணற்ற சான்றுகள் உங்கள் முன்னிருக்க வாலிபரே, கன்னிகையே உன் வாழ்வை ஆண்டவரிடம் திருப்பு! ஆண்டவருக்காய் செயற்கரிய காரியம் செய்! உனக்குரிய ஆசீர்வாதத்தை அனுபவி!!

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## சீஷத்துவத்தில் பெண்கள்
## (Women in Discipleship) Luke 8:1-3

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

தாயும் தந்தையுமாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களனைவருக்கும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஆண்களை மாத்திரமல்ல, பெண்களையும் தம் உன்னதமான திருப்பணிக்காக ஆண்டவர் அழைக்கிறார், தெரிந்து கொள்கிறார், அபிஷேகிக்கிறார், பெலப்படுத்துகிறார், பயன்படுத்துகிறார். ஆண்களைப் போல் பெண்களையும் சமமாக சீஷத்துவத்தில் பயன்படுத்துகிறார். ஆண்டவரின் அற்புதங்களினாலும், போதனையினாலும், அன்பினாலும் அனேக பெண்கள் அவராலே தொடப்பட்டு, குணமாக்கப்பட்டு, அவருக்குப் பின்னாக நடக்க அர்ப்பணிக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களைக் கர்த்தரும் அங்கீகரிக்கின்றார். மேன்மையான இடங்களில் ஏறிவரச் செய்கிறார். பொதுவாக சீஷத்துவம் என்பது ஒரு குருவையும், அவரது போதனைகளையும் விசாரித்து, தெளிவு பெற்று, கற்றுக்கொண்டு பின்பற்றுவதாகும். அதேபோல சீஷராக அழைக்கப்படுகிறவர்கள் குருவால் அனுப்பப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.(Disciples-Apostles).

இடைக்காலத்திய யூத சமயத்தில் சீஷர் என்று அழைக்கப்பட்டவர் தோரா என்னப்படும் நியாயப்பிரமாணத்தின் விளக்கங்களை ரபீமாரிடம் கற்று வந்தவர்களாவார்கள். ஆண்டவர் இயேசுவின் காலத்தில் மிகப் பிரபலமாயிருந்த ஹில்லேல் (hillel), ஷம்மாய் (shammai) என்ற யூத ரபீக்களைச் சார்ந்த கல்விக்கூடங்கள் இருந்தன. சில குருக்கள் நாடோடிகளாய் எங்கும் திரிந்து, ஒவ்வொரு ஊர்களிலும் இறைவனையும், இறைச்சட்டங்களையும் போதித்து வந்தார்கள். இயேசுநாதரும் அப்படிப்பட்ட ஒரு ரபீயாக இருந்து ஓய்வுநாட்களில் அந்தந்த ஊரில் உள்ள ஜெப ஆலயங்களிலும், பிற நாட்களில் பொது இடங்களிலும் போதித்து வந்தார். ஆனால் அவரது போதனைகளும் குருத்துவமும் மற்ற ரபீக்களைக் காட்டிலும் மேம்பட்டதாகவும், வித்தியாசமாகவும் இருந்தன. காரணம் இயேசு, ஆண் பெண் வேறுபாடின்றியும், சமுதாயப் பாகுபாடின்றியும் அனைவரையும் சீஷத்துவத்திற்கு அழைத்து ஆயத்தப்படுத்தினார். இயேசுவின் சீஷத்துவத்தில் ஆயக்காரரும், மீன்பிடிக்கிறவர்களும் மாத்திரமல்ல, “பெண்களும்” அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அப்படிப்பட்ட பெண் சீஷத்துவத்தைக் குறித்த சில திருப்பணி முன்மாதிரிகளைப் பார்க்கலாம்.

1.விசுவாச சீஷிகள் (Faithful Disciples): லூக்கா 8:2-ன்படி பொல்லாத ஆவிகளுடைய பெண்களும், வியாதிகளைக் கொண்ட பெண்களும் இயேசுகிறிஸ்துவால் குணமாக்கப்பட்டார்கள். அதனால் ஆண்டவர்மீது அவர்களுக்கு விசுவாசம் அதிகமாகி அவருக்குப்பின் சென்றார்கள். அதேபோல குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால் ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும் ஒருவர். இவர்கள் ஆண்டவரால் புதுவாழ்வு பெற்றதால் எப்போதும் அவர் பின்னாகச் செல்லும் சீஷியாக மாறி, உயிர்ப்பிலும் ஆண்டவரால் அடையாளம் காட்டப்பட்டார்.

2.தைரியமான சீஷிகள் (Bold Disciples): லூக்கா 8:3அ-வின்படி ஆண்டவர் இயேசுவின் பிறப்பைப் பொறுக்கமாட்டாமல், அவர் யூதருடைய ராஜாவாக சிம்மாசனத்தில் உட்கார்ந்து தன்னை அழித்துவிடுவாரோ என்ற பயத்திலும், கோபத்திலும் இருந்தவர் ஏரோது அரசன். அப்படிப்பட்ட நெருக்கடியான, ஆபத்தான சூழ்நிலையிலும் தம் கணவர்கள் ஏரோதின் அரண்மனையில் காரியக்காரராராக வேலை செய்தபோதும் கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றது எத்தனை தைரியமானது! வேலை போகலாம், ஏன் உயிரே போகலாம். இதில் எந்த அச்சுறுத்தலுக்கும் பயப்படாத தைரியமான சீஷிகள். ஆண் சீடர்கள் பயந்து, ஓடி ஒளிந்து, மறுதலித்தபோதும் பெண் சீஷிகள் துணிச்சலுடனும், தைரியத்துடனும் சிலுவை அருகில் நின்றதை நாம் அறிவோம்.

3.பகிர்ந்துகொண்ட சீஷிகள் (Sharing Disciples): லூக்கா 8:3ஆ-வின்படி இன்றும் ஊழியத்திற்காக பெரும்பாலும் காணிக்கைகள் கொடுப்பது அதிக அளவில் பெண்களே என்று ஒரு புள்ளிவிவரம் சொல்லுகிறது. இன்று மாத்திரமல்ல, இயேசுவின் காலத்திலும் அவரது ஊழியத்திற்காகத் தங்கள் ஆஸ்திகளை அநேகம் பெண்கள் தாராளமாய் பகிர்ந்து கொண்டதாய் லூக்கா குறிப்பிடுகின்றார். இயேசுவின் ஊழியத்திற்கு ஆஸ்தி தேவையா? ஆம், எளியவர்களுக்கு உணவும், நலிந்தோருக்கு உதவியும் ஆண்டவர் தொடர்ந்து செய்துவந்தார்.

இன்றைக்கும் நாமும் ஊழியத்தை வாயால் மாத்திரமல்ல, பொருளாலும் செய்யவேண்டும். அதேபோல வாயால் சொல்லப்படும் நற்செய்தி ஊழியத்திற்கு மாத்திரமல்ல, அத்துடன் இணைந்த சமூக மாற்றத்திற்கான ஊழியங்களுக்கும் உதவவேண்டும். இப்படிப்பட்ட மாறாத விசுவாசமும், தைரியமும், உதவி மனப்பான்மையும் கொண்ட சீஷிகளாகப் பெண்களையும், சீஷர்களாக ஆண்களையும் ஆண்டவர் தொடர்ந்து அபிஷேகித்து பயன்படுத்துவாராக. ஆமென்!!.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 1 அனாதியான கர்த்தரே
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 32 மங்களம் சதா

### 06-10-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் |
| பாமாலை | 181 | விருந்தைச் சேருமேன் |
| கீர்த்தனை | 154 | நெஞ்சமே தள்ளாடி நொந்து |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை ஆள் |
| கீர்த்தனை | 151 | யேசுவே, கிருபாசனப்பதியே |

### 13-10-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் |
| பாமாலை | 107 | நிர்ப்பந்தமான பாவியாய் |
| பாமாலை | 118 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன் |

### 20-10-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 173 | உம் அருள் பெற, இயேசுவே |
| கீர்த்தனை | 181 | பொக்கிஷம் சேர்த்திடுங்கள் |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் யேசு சேனை |

### 27-10-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 155 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை | 102 | எங்கே ஓடுவேன் |
| பாமாலை | 117 | நல்மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை | 125 | தேவபிதா என்றன் |
| கீர்த்தனை | 138 | என் உள்ளங் கவரும் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |

வாக்குத்தத்த செய்தி

ஆணையிட்டபடி உன்னை விருத்தியடையப் பண்ணுவார். உபா.13:18(பி)

உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுபவரான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு மாதம் துவங்கும்போதும், நம் வாழ்வில் நாம் எதிர்பார்க்கும் மாற்றங்கள் வந்துவிடாதா, வளர்ச்சியடைந்து முன்னேறிவிடுவோமா என்று சிந்தித்தே துவக்குகிறோம். தொழிற்சாலையை நடத்தும் முதலாளி, இந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு விருத்தியடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். பெற்றோர் தன்னைவிட தன் பிள்ளைகள் எல்லாவற்றிலேயும் விருத்தியடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படியெல்லாம் நம் விருப்பங்களும், எதிர்பார்ப்புகளுமிருக்க, தேவசித்தமும் நம்மை விருத்தியடையச்செய்து, நம்மை ஆசீர்வதிப்பதேயாகும். அதைத்தான் இம்மாதத்தில் நமக்கு வாக்குப் பண்ணுகிறார். ஆணையிட்டபடியே, கர்த்தர் விருத்தியடையப்பண்ணின சிலரைப்பற்றி இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1.ஆணையிட்டபடியே ஈசாக்கை விருத்தியடையச் செய்தார்:

கர்த்தர் ஈசாக்கை நோக்கி, உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் (ஆதி.26:3) என்றார். கர்த்தர் ஆணையிட்டபடியே ஈசாக்கை எவ்வாறு ஆசீர்வதித்தார்? ஈசாக்கின் காலத்தில், அவன் குடியிருந்த பெலிஸ்தரின் தேசத்தில் பஞ்சம் வருகிறது. பஞ்சகாலத்தில் வயல்நிலங்களில் விளைச்சலுமில்லை, விளைச்சலுக்கு ஆதாரமான நீரூற்றும் இல்லை. ஆனால் கர்த்தர் ஈசாக்கை விருத்தியடையப் பண்ணுவேன் என்று ஆணையிட்டதால், அவனுடைய நிலம் நூறுமடங்கு விளைச்சலைத் தந்தது (26:13). தோண்டிய துரவுகளிளெல்லாம் சுரக்கும் நீரூற்றும் (26:17-22) காணப்பட்டது. பஞ்சம் ஈசாக்கின் விருத்தியைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை.

இப்படி கர்த்தர் ஈசாக்கை விருத்தியடையப்பண்ண, அவன் வாழ்வில் காணப்பட்ட சுபாவங்கள் என்ன? முதலாவதாக, தேவநடத்துதலான கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். எப்படியெனில், பஞ்சத்திற்கு நீங்கிப் பிழைக்க, எகிப்துக்குப்போகிற வழியைத் தெரிந்துகொள்ளாமல், கர்த்தரின் வழியான பெலிஸ்தரின் தேசத்தில், பஞ்சம் கொடிதாயிருந்த தேசத்தில் குடியிருப்பதையே தெரிந்துகொண்டான் (26:2). இரண்டாவதாக சாயங்கால வேளைகளில், தனித்திருந்து ஜெபிக்கும் அனுபவத்தை உடையவனாயிருந்தான் (24:63). இவ்விரண்டும் ஈசாக்கின் விருத்திக்கு காரணமாயிருந்தது. பஞ்சத்தை மேற்கொண்ட ஈசாக்கைக் கண்டபோது, பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கும், அவன் ஜனங்களும் ஈசாக்கின்மேல் பொறாமை கொண்டார்கள். இந்த பொறாமையினால் ஏவப்பட்டு, ஈசாக்கின் விருத்தியைத் தடுக்க, பல தடைகளை ஏற்படுத்துகிறார்கள் (26:16,20,21). ஆனால் கர்த்தரின் விருத்தியான ஆசீர்வாதம் ஈசாக்கிடம் இருந்ததால், ரெகொபோத்தின் அனுபவத்தை அவனிடமிருந்து பறிக்க, அபிமெலேக்கால் கூடாமற்போயிற்று.

நம் வாழ்வில் வறட்சியான நிலை காணப்படுகிறதே, விருத்தி உண்டாகாதபடி தடைகள் இருக்கிறதே என கவலைப்பட்டுக் கலங்கத் தேவையில்லை. ஈசாக்கை விருத்தியடையப் பண்ணின தேவன், அவர் ஆணையிட்டபடியே, நம்மையும் வறண்ட காலங்களில் விருத்தியடையப் பண்ணுவார்.

## 2. ஆணையிட்டபடியே யாக்கோபை விருத்தியடையச் செய்தார்:

யாக்கோபு மிகவும் விருத்தியடைந்தான் (ஆதி.30:43). அவனுடைய விருத்தியைத் தடுக்க முயன்றது அவன் நெருங்கின உறவினனான அவன் மாமனாகிய லாபானே. அவனை ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, பத்துமுறை வஞ்சனையாய் ஏமாற்றி, அவன் விருத்தியைத் தடுத்து நிறுத்த லாபான் முயற்சி செய்கிறான். ஒவ்வொரு முறையும், லாபான் தான் ஜெயித்துவிடலாம் என நினைத்து யாக்கோபை எதிர்க்கிறான். லாபானின் வஞ்சிக்கும் வல்லமையை மேற்கொண்டு, கர்த்தர் தாம் ஆணையிட்டபடியே விருத்தியடையப்பண்ண, கர்த்தர் யாக்கோபுக்குத் துணையாக நின்றார். கர்த்தரின் வாக்குத்தத்தத்தை யாக்கோபு பெற்றதால், அவனை ஏமாற்றி, அவன் விருத்தியை எந்த சூதும், வஞ்சனையான ஆலோசனையும் மேற்கொண்டு கெடுக்கமுடியவில்லை. மேலும், யாக்கோபு தன்னை வஞ்சிக்க முயன்ற அவன் மாமனை நினைத்துக் கலங்காமல், வேதனையில் ஆழ்ந்திராமல், வஞ்சிக்கப்படாதபடி பாதுகாத்த கர்த்தரின் ஒத்தாசையையே நினைத்துப் பார்த்ததால் தொடர்ந்து வேலையை ஜாக்கிரதையோடும், உற்சாக ஆவியோடும் செய்ய முடிந்தது. லாபானை ஏமாற்ற அவன் செய்தபடியே தானும் அவனுக்கு பதில் செய்யாமல், உண்மையாகவே இருபது வருடமும் வேலை செய்து, விருத்தியடையவும் முடிந்தது (28:13-15). கர்த்தர் தாம் ஆணையிட்டபடியே அவனை ஆசீர்வதித்து, அவனைச் சமாதானத்துடன் கானானுக்குத் திரும்பும்படி செய்ததை, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். யாக்கோபு அறிக்கை செய்து சாட்சி பகரும் மனமகிழ்ச்சியின் அனுபவத்தை பெறவும் நம் முன்னேற்றத்தை, நமக்கு வரவேண்டிய உயர்வை நம் நண்பன் அல்லது நம் நெருங்கின உறவின் முறையானவனே தடுக்கிறானே என நினைத்து கலங்கவேண்டாம். கர்த்தர் தாம் ஆணையிட்டபடியே விருத்தியடையப்பண்ண நமக்குத் துணை நிற்கிறார். நம்முடைய உழைப்பைக் கனப்படுத்துவார்.

## 3.ஆணையிட்டபடியே விசுவாச மார்க்கத்தாரை விருத்தியடையப்பண்ணுவார்:

ஆபிரகாமின் சந்ததியை விருத்தியடையச் செய்வதே தேவசித்தமும், தேவதிட்டமுமாய் இருக்கிறது (எபி.6:13,14). எனவே ஆபிரகாமை பெருகவே பெருகப் பண்ணுவேன் என தேவன் ஆணையிட்டார். விசுவாச மார்க்கத்தார் யாவரும் ஆபிரகாமின் சந்ததியே (கலா.3:7). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும், ஆபிரகாமின் ஆசீர்வாதமான கர்த்தரின் விருத்தியடைகிற ஆசீர்வாதம் உண்டு. எவைகளிலெல்லாம் தேவன் விருத்தியை வாக்குப்பண்ணுகிறார்? உள்ளான பரிசுத்தம், தேவ அன்பு, சகலவிதமான நற்கிரியைகளுமாகிய கனி, தேவனை அறிகிற அறிவு (கொலோ.1:10) போன்ற ஞானநன்மைகளில் தேவன் விருத்தியை வாக்குப்பண்ணுகிறார். இப்படி, தேவனோடுள்ள ஐக்கியத்தில் பலப்படாதபடி, பக்திவிருத்தியடையாதபடி, விசுவாசக் கப்பலைச் சத்துருவாகிய பிசாசின் தந்திரங்களும், உலகமும், மாம்சமும் சேதப்படுத்தி, நம்மை கரைப்படுத்த வல்லமையுள்ளதாய் இருக்கிறது. இவற்றை மேற்கொண்டு, கர்த்தரின் சமூகத்தின் பரிபூரண சந்தோஷத்தை அடைய, ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ, உயிர்த்தெழுந்த கிறிஸ்து,

வாக்குப்பண்ணின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அருளி, அவர் நமக்குள் வாசம் செய்து, சகலவித நற்கனியில் நம்மை பெருகப்பண்ணி, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான சாயலாய் நம்மை மறுரூபமாக்கி, பூரண அலங்காரமுள்ள மணவாட்டியாக மாற்றுகிறார். நாம், நம் அவயவங்கள் ஒவ்வொன்றையும் நீதியின் ஆயுதமாக மாறும்படி, பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு அர்ப்பணிப்போம். தேவன் ஆணையிட்ட கனியுள்ள கிறிஸ்துவ வாழ்வைச் சுதந்தரிப்போம்.

கர்த்தர் தாம் ஆணையிட்டபடியே, உங்களை வர்த்திக்கப்பண்ணி உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

டோரா ஒரு அழகிய குட்டிப்பெண். 3-வது வகுப்பு படித்து வந்தாள். அவளுக்கு வேதத்தைப் போதிக்கும் அன்பான பெற்றோர் இருந்தனர். டோரா இயேசுவை நேசித்தாலும் சிலவேளைகளில் சுட்டியாகவும், கீழ்ப்படியாமலும் இருந்தாள்.

ஒருநாள் டோராவின் பெற்றோர். ஒரு பெரிய பெட்டியை வீட்டிற்குள்ளே கொண்டு வந்தனர். அது டோராவின் குறுகுறுப்பைப் கிளறிவிட்டது. ஆனால் அவளது அப்பா அதைத் திறக்க அவளை அனுமதிக்கவே இல்லை. ஒருநாள் அதைக் காட்டிக் கொடுப்பதாகச் சொன்னார். அதற்குள் என்னதான் இருக்கும் என்று டோரா சிந்தித்தாள். பெற்றோருக்குத் தெரியாமல் பெட்டியைத் திருட்டளவாய் திறந்து பார்க்கும்படி சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டே இருந்தாள்.

டோராவின் பெற்றோர் இருவரும் GMC மருத்துவமனையில் வேலை பார்த்தனர். அது ஒரு வியாழக்கிழமை. இருவருக்கும் Day shift வந்தது. டோராவிடம், அவள் தகப்பன் சாவியைக் கொடுத்துவிட்டு, school முடிந்து வீட்டைத் திறந்து பத்திரமாக இருக்கும்படி கூறிவிட்டு இருவரும் வேலைக்குச் சென்றனர். டோராவுக்கு ஒரே சந்தோஷம். அம்மா, அப்பா இருவரும் மாலை 4:30 மணிக்குத்தான் வருவார்கள். நான் 2:00 மணிக்கெல்லாம் வந்துவிடுவேன். ஆகவே வந்தவுடன் சாப்பிட்டுவிட்டு பெட்டியைத் திறந்து பார்த்துவிட வேண்டியதுதான் என மனதில் நினைத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டாள்.

டோரா school முடிந்து வீட்டிற்கு வந்தாள். வந்தவுடன் வயிறு பசித்ததால் நன்றாகச் சாப்பிட்டாள். பின் snacks சாப்பிட்டு தண்ணீரைக் குடித்துவிட்டு பெட்டியைத் திறக்க ஆயத்தமானாள். பெட்டியை நெருங்கும் முன் அப்பாவின் வார்த்தைகள் மனதில் நினைவுக்கு வந்தது. "டோராமா! நல்ல பிள்ளையாகவும், ஜாக்கிரதையாகவும் இரு. Toys வைத்து விளையாடிக் கொண்டிரு, பெட்டியை மட்டும் திறந்துவிடாதே செல்லம்" என அப்பா சொன்ன வார்த்தைகள் மனதில் ரீங்காரமிட்டுக்கொண்டே இருந்தது.

டோராவின் அப்பா அவளை மிகவும் நேசித்தார். இந்த அன்பின் வார்த்தைகளை மீற அவள் இருதயம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அவளின் குறுகுறுப்பையும் அவளால் அடக்கமுடியவில்லை. மெல்ல மெல்ல பெட்டியின் அருகே நடந்து சென்றாள். அதன் அருகே உட்கார்ந்து பட்டென்று மூடியைத் திறந்தாள். என்ன நடந்ததென்று அறியுமுன்பாக தேனீக்கள் கூட்டம் வெளியே வந்து அவளைச் சரமாரியாக கொட்டத் தொடங்கின.

டோரா பயந்து அரண்டு அலறத் துவங்கினாள். தேனீக்களுக்குத் தப்ப வழியில்லை. அவள் கூக்குரலிடவும், அவள் தாய் தகப்பன் வரவும் நேரம் சரியாய் இருந்தது. டோராவின் முகம், கை, கால்கள் சிவந்து வீங்கியிருந்தன. அவள் மூச்சுத் திணறி வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். உடனடியாக அவள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவசர சிகிச்சை செய்யப்பட்டு ஊசிகள் பல போடப்பட்டன. கடினமான வழியில் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டாள்.

சிறுவயதில் உள்ள பிள்ளைகளுக்குத் தேவன் கொடுக்கும் ஒரே கட்டளை பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதே. அவர்களுக்குக் கீழ்படியும்போது உங்களுக்கு நன்மை உண்டாகும் என வாக்குப் பண்ணுகிறார். கீழ்ப்படிதல் கடினமென்றாலும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தால் உலகத்தின் பல ஆபத்துகளுக்குத் தப்பி ஆண்டவருடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். சிறுவயதிலிருந்து, தேவனுடைய கட்டளைகளை மதித்துக் கீழ்ப்படிந்து அவருக்கென கனி கொடுக்கும் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வோம். இயேசுகிறிஸ்துவை நேசிப்பதைக் காட்டும் ஒரே வழியும் இதுதான்.

**வேதவாசிப்புப் புகுதி :** லூக்கா 2:51,52
**மனப்பாட வசனம் :** எபேசியர் 6:1

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

சமாதானத்தின் தேவனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவுக்கு கோடி ஸ்தோத்திரங்களை சமர்ப்பிக்கிறேன்.

கடந்த செப்டம்பர் மாதம் அனைத்து வாரங்களிலும் நமது திருச்சபையில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றது. சபையார் அனைவரும் தவறாது ஜெபத்தோடு பங்குபெற்று தேவ ஆசி பெற்றிருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். செப்டம்பர் 8ஆம் தேதி அன்று நமது ஆலயத்தில் சகோ. ஐசக் ஜோ அவர்கள் சிறப்பு செய்தி கொடுத்து ஆராதனையை சிறப்பித்தார்கள். அதே தினத்தன்று நமது சிறுவர் பாடசாலையும் (Junior Church) ஆரம்பமானது. அன்றைய தினம் மழலையர் முதல் நான்காம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு சிறப்பு முகாம் திருமதி.பெர்சி வெஸ்லி பால் அவர்களால் சிறப்பாக நடைபெற்றது.

செப்டம்பர் 15ஆம் தேதி அன்று உம்-அல்-குவைன் தமிழ் திருச்சபையின் குருவானவர் Rev. ஜெபவாசகன் அவர்கள் தமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு அழைப்பு விடுத்து, அன்றைய ஆராதனையில் செய்தி கொடுத்து நமது ஆராதனையை சிறப்பித்தார்கள்.

செப்டம்பர் 22ஆம் தேதி நமது ஆலய ஆராதனையில் முன்னாள் பிரதம பேராயரும், கிருஷ்னா-கோதாவரி பேராயத்தின் இப்போதைய பேராயருமான மதிப்பிற்குறிய Rt. Rev. Dr. தேவாசீர்வாதம் அவர்கள் சிறப்பு செய்தி கொடுத்து ஆராதனையை சிறப்பித்தார்கள். அதைத் தொடர்ந்து மாலை 4மணிக்கு தென் இந்திய திருச்சபை தெலுங்கு சபையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டங்களில் அவர்கள் பங்குபெற்றார்கள். நமது திருச்சபையின் அங்கத்தினர்களும் சிலர் பங்குபெற்று அவ்வாராதனையை சிறப்பித்தார்கள்.

இம்மாதம் 28ஆம் தேதி வியாழக்கிழமை சோனாப்பூர் முகாம் பகுதியில் சகோ. ராஜ்குமார் மற்றும் சகோ. நிமல் ஜோஸ் தலைமையில் மருத்துவ விழிப்புணர்வு முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முகாம் பகுதியில் உள்ள அநேக தொழிலாளர்கள் பங்குபெற்று பயனடைந்தார்கள். வெள்ளிக்கிழமை ஆலய ஆராதனையை தொடர்ந்தும் நமது ஆலய வளாகத்தில் மருத்துவ விழிப்புணர்வு முகாம் மிக சிறப்பாக நடைபெற்றது. இத்தகைய மருத்துவ முகாம் நமது திருச்சபையின் புதிய ஊழியப்பிரிவு, ஆதலால் திருச்சபையார் இவ்வூழியத்திற்கு ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வெள்ளியன்று நமது ஆராதனையில் தென் இந்திய திருச்சபை மலையாளம் சபையின் குருவானவர் Rev. குருவிலா அவர்கள் சிறப்பு செய்தி கொடுத்து ஆராதனையை சிறப்பித்தார்கள்.

அறுப்பின் பண்டிகையை முன்னிட்டு, நமது திருச்சபையின் ஜெபக்குழுக்கள் மற்றும் ஐக்கியங்கள் வாரந்தோறும் உணவு பொருட்களை படைத்து மிகசிறப்பாக பங்குபெறுவதைகுறித்து தேவனை மகிமை படுத்துகிறேன். இவ்வருடம் நமது அறுப்பின் பண்டிகையை ஒரு பாரம்பரிய விழாவாகக் (Traditional Festival) கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, திருச்சபையார் தங்களது பாரம்பரிய பொருட்களை படைப்பது மட்டுமல்லாமல், நமது இளம் தலைமுறையார்களுக்கு அறுப்பின் பண்டிகையின் பாரம்பறியத்தை வேத

அடிப்படையிலாக நினைப்பூட்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நமது அறுப்பின் பண்டிகைக்காக திருச்சபையார் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அக்டோபர் மாதம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க நமது தேவாதி தேவனை வேண்டுகிறேன். நீங்களும் நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களிலும் ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

# அன்பு

மனக்கோட்டை தனையாளும் மந்திரிகள் ஒன்பதுபேராம்
கணக்கெடுத்தால் துணைக்குவரும் இச்சை யடக்கம்
இணையாக வினைபுரியும் நீடிய பொறுமை
கனிவாக தயவு சந்தோசம் சமாதானம்

நீட்டிவைத்த பட்டியலில் சாந்தம் விசுவாசம்
போட்டியின்றி முந்திவந்து உதவிவிடும் நற்குணம்
கூட்டத்தில் ஏற்றந்தரும் முதல்வராக ஒண்ணாகும்
வாட்டம்போக்கி ஊட்டமூட்டி மகிழ்விக்கும் அன்பாகும்

விசுவாசம் நம்பிக்கை ஈடுஇணை இல்லாததாம்
அசராமல் பிசகாமல் இவற்றுள்ஒன்றே பெரியதாம்
திசைதோறும் காலாகாலம் நிரூபித்து நிற்பதாகும்
அசத்திவைக்கும் அன்பாகும் உசத்திநிற்கும் அன்பேயாகும்

வெளிப்படுத்தும் மொழியாக சத்துருவை சிநேகியுங்கள்
பழிப்போரை சபிப்போரை ஆசீர்வதித்து வையுங்கள்
சுளிக்காமல் செய்யுங்கள் பகைப்போருக்கும் நன்மைகள்
விழிப்போடு ஜெபியுங்கள் துன்பத்தையே தருவோருக்கும்

கல்வாரி அன்பு எல்லோருக்கும் சாட்சி
நல்லார்க்கும் பொல்லார்க்கும் கண்முன்னே காட்சி
சொல்லுக்கும் செயலுக்கும் சொல்லாச்சொல் நீட்சி
உலகெலாமே உய்விக்கும் அன்புருவில் ஆட்சி.

ஆதாரம் : கலாத். 5:22-23, 1கொரிந். 13:13, மத். 5:43-47.
கவிதை எண் : 201.
ஆக்கம் : மணிமுத்து.

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## ஸ்தோத்திரப் பண்டிகை 2017

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை யெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

நாள் : வெள்ளிக்கிழமை 17-11-2017

இடம் : **INDIAN HIGH SCHOOL**

நேரம் : காலை 7.30 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை

## நிகழ்வு முறைமை

காலை 07.30 மணி : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை
காலை 08.30 மணி : ஸ்டால்கள் திறப்பு விழா, விற்பனை
காலை 10.00 மணி : ஏல விற்பனை
நண்பகல் 01.30 மணி : ஸ்தோத்திரப் பண்டிகை நிறைவு ஜெபம்,ஆசீர்வாதம்

உணவு ஸ்டால்கள்: காலை சிற்றுண்டி, இனிப்பு, காரங்கள், காப்பி, தேனீர், குளிர்பான ஸ்டால்கள், பிரியாணி மற்றும் இதர ஸ்டால்கள்.

ஊக்கமாய் ஜெபியுங்கள்!
மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!
உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

# நீங்கள் கிறிஸ்தவரா...

உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். மாற்கு 10:44.

நன்மை
நேர்மை
தூய்மை
தன்னலமற்ற
தொண்டு
இவையே
வம்சம் வளரும்
அம்சங்கள்.
வேதத்தின்
ஆதாரம்....
ஆண்டவரிடமும்
அனைவரிடமும்
உண்மையாய் இரு.
நல்லவனாக இரு
நல்லதையே செய்.
கருணையுடனும்
பணிவுடனும் இரு.
எவருக்கும்
எப்போதும்
தொண்டுசெய்
என்றால்
எல்லாவற்றிலும்
கர்த்தரின் கிருபை
தானே வரும்.
நீங்கள்
அதிகாரங்கள்
உடையவரா...
அறிவாளியா...
அளப்பெரிய
செல்வந்தரா...
எவராக இருப்பினும்
கர்த்தராம்
ஆண்டவருக்கும்
அவர்.. தம்...
அடியாருக்கும்

வறுமையில் வாடும்
வறியவருக்கும்
ஊழியம்
செய்தாலன்றி
உயர்வு எனும்
உச்சத்தை
அடைவது சிரமமே.
வேலைக்காரனாய் இரு
எஜமானன் ஆவாய்
என்றொரு
சொல்லுண்டு
பிறருக்கு
உதவுவதும்
ஊரையும்
சுற்றுச் சூழலையும்
சுத்தம் செய்வதும்
ஊழியமே...
அடிமட்டத்
தொண்டனாய் இரு
ஆடு மேய்த்தவரையும்
அரசனாக்கினாரே
ஆண்டவர்...
அனைவரையும்
அரவணைத்தும்
சுவிசேஷம்
சொல்லியும்
வாழ்ந்து பாருங்கள்.
கர்த்தர்
அதிகார பதவி
தருவாரே...
அன்பரே...
முதன்மை நிலைக்கு
வரவிருப்பமா...
புனிதமான
பைபிள் காட்டும்

பாதையை
தொடர்வோமே..
பொருள்
உள்ளவரா நீங்கள்...
ஊதியம் பெறாது
ஊழியம்
செய்யலாமே...
இருள் இல்லா
மனம் உள்ள
அருள் பெற்றவரா
நீங்கள்...
உடலாலும்
உழைப்பாலும்
மனதாலும்
ஊழியத்தில்
அர்ப்பணித்து
வாழலாமே...
வாழ்வு
நிலையில்லாதது
வரலாறு மறையாதது
வரலாற்றில்
இடம் பிடிப்போமே...
இவையாவும்
உலகியல் நிலை
வாழ்வின் கலை
எனினும் அன்பரே....
இயேசுவிடம்
இடைவிடாது
தொடர்பு வையுங்கள்
பரமமான நிலை
இதுவே
முதன்மை நிலையும்
விலையில்லா
பரமானந்தமும்
அதுவே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## யாக்கோபு

ஏசாவைச் சந்திக்க யாக்கோபு ஓடி வந்தார். இதைப்பார்த்த ஏசா தானும் ஓடிச் சென்று அவரைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு அழுதார். தேவனாகிய கர்த்தர் ஏசா மற்றும் அவரது மனிதர்களிடமும் யாக்கோபைக் குறித்த பயத்தை ஏற்படுத்தினபடியால் அவர்களும் யாக்கோபை முத்தமிட்டு, கட்டித் தழுவிக் கொண்டனர். ஏசா தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ யாக்கோபின் குமாரர், அவருடைய மனைவிகள், அவர்களுடைய புத்திரர் அனைவரும் யாக்கோபின் பின் சென்று, ஏசாவை பணிந்து கொண்டனர். ஏசா யாக்கோபை நோக்கி, “சகோதரனே, யார் இவர்கள்? இவர்கள் உன்னுடைய குமாரரா அல்லது வேலையாட்களா?” என்று வினவினார். அதற்கு யாக்கோபு, “இவர்கள் தேவனாகிய கர்த்தர் அடியானுக்கு தயவாக அருளிய குமாரர்” என்றார்.

யாக்கோபு அளித்த பரிசுப் பொருட்களை மறுத்த ஏசா, யாக்கோபுடைய வற்புறுத்தலின் நிமித்தம் பெற்றுக்கொண்டார். பெற்றுக்கொண்ட மந்தையை இரண்டாகப் பிரித்து, ஒரு பாதியை தன்னுடன் வந்த மனிதர்களுக்கும், மற்ற பாதியை தன்னுடைய குமாரருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார் ஏசா. பரிசாகப் பெற்றுக்கொண்ட வெள்ளியையும், பொன்னையும் தன் மூத்த குமாரனாகிய எலிப்பாசிடம் கொடுத்துவிட்டு, யாக்கோபை நோக்கி, நாங்கள் உங்களோடே இருந்து உங்களுடன் சேர்ந்து என்னுடைய இருப்பிடத்திற்குச் சென்று அங்கே சேர்ந்து வாழுவோம் என்றார். யாக்கோபு ஏசாவிடம் தன்னுடைய குமாரர் மற்றும் மந்தையினிமித்தம் உடனடியாக தங்களுடன் விரைவாக வர இயலாது. நீங்கள் சேயீர் மட்டும் முன் செல்லுங்கள் என்று வேண்டிக்கொண்டார். யாக்கோபின் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுத்த ஏசாவும் தன்னுடைய 400 மனிதர்களோடு சேயீருக்குச் சென்றுவிட்டார்.

இவைகளுக்குப் பின்பு யாக்கோபு சீகேம் என்னும் கானானிய நாட்டிற்கு வந்து அங்கே தங்கிவிட்டார். அங்கே ஹாமாரிடம் ஒரு நிலத்தை 5 சேக்கல் தொகைக்கு வாங்கி, அங்கே தானே கூடாரமிட்டு, தன்னுடைய மந்தைக்கும் தங்குமிடங்களை உண்டாக்கி, அவ்விடத்திற்கு சுக்கோத் என்று பெயரிட்டு அங்கே தங்கியிருந்தார். யாக்கோபு சுக்கோத்தில் ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்தார்.

சுக்கோத்திலுள்ள பெண்கள் நடனமாடி களிகூரும்படியாக கூடினார்கள். இதையறிந்து யாக்கோபின் மனைவிகள் லேயாள், ராகேல் இருவரும் அதைத் தாங்களும் கண்டு களிக்க விரும்பினர். அவர்களுடன் தீனாளும் உடன் சென்றாள். பெண்களின் நடனத்தைக் கண்டுகளிக்க ஹாமாரின் மகன் சீகேமும் வந்திருந்தான். அவன் தீனாளைக் கண்டு, அவளைக் குறித்து தன் நண்பர்களிடமும், தன் மனிதர்களிடமும் வினவினான். அவர்கள் அவனுக்குப் பிரதியுத்திரமாக இவள் நம்மிடையே வாழுகின்ற

யாக்கோபு என்னும் எபிரெயனுடைய குமாரத்தி என்றனர். இதைக் கேட்டவுடன் சீகேம் அவளை வலுக்கட்டாயமாக தூக்கிக் கொண்டுபோய் அவளோடே சயனித்து, அன்பின் மிகுதியினால் அவளைத் தன்னுடைய வீட்டிலேயே இருக்கச்செய்தான்.

நடந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட யாக்கோபு தன்னுடைய வேலைக்காரரில் 12 பேரை அனுப்பி, தீனாளை சீகேமின் வீட்டிலிருந்து தூக்கி வர அனுப்பினார். இந்த 12 பேரும் தீனாளை தூக்கி வர சீகேமுடைய வீட்டிற்குச் சென்றனர். சீகேம் தன்னுடைய ஆட்களோடே சென்று அவர்கள் தீனாவிடம் நெருங்காதவாறு அவர்களை துரத்திவிட்டான். யாக்கோபின் வேலையாட்கள் இதை வந்து யாக்கோபிடம் அறிவித்தனர். யாக்கோபின் குமாரர்கள் மந்தையை மேய்க்கச் சென்றிருந்தபடியால் அவர்கள் வரும்வரை யாக்கோபு எதுவுமே பேசாமல் மவுனமாயிருந்தார். ஆனால் அவர்கள் வரும் முன்பாக யாக்கோபு தன்னுடைய வேலைக்காரருடைய குமாரத்திகளில் இருவரை சீகேமுடைய வீட்டிற்கு அனுப்பி அவர்களை தீனாவைக் கவனித்துக்கொள்ள அனுப்பி வைத்தார்.

பின்பு சீகேம் தன்னுடைய சிநேகிதரில் மூவரை, தன்னுடைய தகப்பனாரிடத்தில் அனுப்பி, தீனாளை தன்னுடைய மனைவியாக்குமாறு வேண்டினான். சீகேமின் தகப்பனாகிய ஹாமார் சீகேமை நோக்கி, நீ எபிரெயப் பெண்ணைக் கொள்வதற்கு, நம்மிடையே உள்ள பெண்களிடத்தில் உனக்கு பெண் கிட்டாதே போனதென்ன? என்றார். சீகேம் அவரை நோக்கி, “என்னுடைய கண்களுக்கு இவளே பிரியமானவளாயிருக்கிறாள்” என்றான்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - அக்டோபர் 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-10-2017 மாற்றுத் திறனாளிகள் திருநாள் | மாற்றுத் திறன்: வாழ்வின் புனிதம் | யாத்தி. 4:10-17 | 2 கொரிந். 12:1-10 | யோவான் 5:1-9 | 37 |
| 13-10-2017 வாலிபர் திருநாள் | தற்கால உலகில் வாலிபரின் ஆன்மீகம் | ஆதியா. 41:37-43 | பிலிப்பியர் 3:1-16 | மத்தேயு 19:16-22 | 111 |
| 20-10-2017 | இறையாட்சிக்காக ஆபத்திலும் துணிவு | எஸ்தர் 8:1-17 | பிலிப்பியர் 2:25-30 | மத்தேயு 10:37-42 | 12 |
| 27-10-2017 சீர்திருத்தத் திருநாள் | விசுவாசத்தை மீண்டும் கண்டறிந்து வாழுதல் | 2 நாளா. 34:8-21 | வெளிப். 2:1-7 | யோவான் 2:12-22 | 46 |

# திருச்சபை ஜெபநாள் 01-10-2017 (முதல் ஞாயிறு)

"பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்." சங்கீதம் 123:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- Pre KG முதல் Grade 4th வரை உள்ள Junior Church சிறுவர்களுக்கு Retreat, Junior Church சிறுவர்களுக்கான Memory Verse Contest, Teachers Retreat, பாடல் ஆராதனை யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

